**JUDICIAL MAGISTRATE COURT NO.II CHENGALPATTU**

**CC No.88/2017**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
*********

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.I CHENGALPATTU. |
| Deposition of witness for | : PW- 7 |
| Name | : Thiru.Edwin kovil raj |
| Father's Name | : ராஜநாயகம் |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 20.02.2019.

**முதல் விசாரணை -**

நான் சென்னை கொளத்தூரில் வசித்து வருகிறேன். நான் சோழிங்க நல்லூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் பிர்கா சர்வேயராக பணி புரிந்து 2018, ஜனவரியில் நான் பணி ஓய்வு பெற்று விட்டேன். 1998 முதல் 2000 வரை தாம்பரம் ஊர் வட்ட அலுவலராக பணி புரிந்தேன். அப்பொழுது கனகராஜ் என்பவர் வட்ட துணை ஆய்வாளராக பணியில் இருந்தார். வரதராஜன் என்பவர் மண்டல துணை வட்டாட்சியராக இருந்தார். லோகநாதன் என்பவர் சிட்லபாக்கம் விஏஓ வாக இருந்தார். அப்பொழுது DIS RPT 32224 of 2000/ DIS RPT No.33326 of 2000/ ஆகிய 2 பட்டாக்கள் சர்வே எண் 189|1ஜே என்ற எண்ணிற்கு பட்டா எண் 585 என்ற எண்ணில் 2 பட்டாக்கள் வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறு ஒரே சர்வே எண்ணிற்கு 2 பட்டாக்கள் வழங்க வாய்ப்பு இல்லை. சிபிசிஐடி அலுவலகத்தில் மேற்படி பட்டாவை என்னிடம் காண்பித்து அது யாருடையது என்று என்னிடம் கேட்டார்கள். பட்டாவில் யாருடைய கையொப்பம் உள்ளது என்று எனக்கு சரியாக நினைவில் இல்லை. சுமார் 18 வருடங்களுக்கு மேல் ஆகி விட்டதால் எனக்கு ஞாபகம் இல்லை. இன்று நீதிமன்றத்தில் என் முன்பாகக் காண்பிக்கப்படும் அதசாஆ 3, 4 - 2 ஆவணமும் அன்று என்னிடம் விசாரணையில் காண்பித்த பட்டாவும் ஒன்றுதான். தற்பொழுது மேற்படி ஆவணத்தில் யார் யார் கையொப்பம் உள்ளது என்று எனக்கு சரியாக தெரிய வில்லை. நான் போலிஸ் விசாரணையில் எனக்கு தெரிந்தவற்றை சொன்னேன். இன்று நீதிமன்றத்தில் லோகநாதன், சுவாமிநாதன் ஆஜரில் உள்ளார். மற்ற யாரையும் எனக்கு தெரிய வில்லை.

குறுக்கு விசாரணை -

சிட்லபாக்கம் விஏஓ அலுவலகத்தில் இருந்து தாம்பரம் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு சுமார் 10 கி.மீ. தூரம் இருக்கும். நான் வட்டாட்சியர் அலுவலகத்தில் இருந்ததால் விஏஓ அலுவலகத்தில் என்ன நடக்கிறது என்பது எனக்கு தெரியாது. ஒரு ஏர் என்பது 2.47 சென்ட் ஆகும். 1|2 ஏர் என்பது 1.23 சென்ட் என்றால் சரி. 1 1|2 ஏர் எனபது 1635 சதுர அடி என்றால் கணக்கு போட்டு பார்த்தால் தெரியும். இவ்வழக்கானது உயர் நீதிமன்றத்தால் எதற்காக போடச் சொல்லப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது. பொதுவாக நாங்கள் வழங்கும் 2 பக்கங்களிலும் அச்சடிக்கப்பட்டு இருக்கும் என்றால் சரி. இன்று நீதிமன்றத்தில் என் முன்பாகக் காட்டப்படும் அதசாஆ 3 மற்றும் 4 ல் ஒரு பக்கம் தான் அச்சடிக்கப்பட்டுள்ளது என்றால் சரி. உயர் நீதிமன்றத்தில் சர்வே நம்பர் 190|2ஏ ல் உள்ள 1000 ச.அடி நிலத்திற்கு போலியாக பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றும் அதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று உத்தரவு போடப்பட்டுள்ளது. உயர் நீதிமன்றத்தால் சர்வே எண் 189|1ஜே ல் உள்ள 1433 ச.அடி நிலத்திற்கு வழங்கப்பட்டுள்ள பட்டா நம்பகமானது தான் என்று ஆணை வழங்கப்பட்டுள்ளதா என்றால் எனக்கு தெரியாது. அதசாஆ 3 மற்றும் 4 ல் 189|1 ஜே 1 ஏர் மற்றும் 1 1|2 ஏர் என்று தனித்தனியாக பிரித்து காட்டப்பட்டுள்ளதா என்றால் ஆம். நான் சிபிசிஐடி அலுவலகத்திற்கு செல்ல வில்லை என்றும் அவ்வாறு சென்றதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

ஒம்/=XXXXX

Typewritten to my dictation in open court lead over to the witness in tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

ஒம்/= XXXXXXXXXXX
நீதித்துறை நடுவர் எண்.1,
செங்கல்பட்டு.